www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

# அரையாண்டு பொதுத் தேர்வு - 2024

## பன்னிரெண்டாம் வகுப்பு

நேரம் : 3.00 மணி **பொருளியல்** மதிப்பெண்கள் : 90

## பகுதி – I

(i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். **20 x 1 = 20**

(ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்

1. "நவீன பேரியல் பொருளியலின் தந்தை" என அழைக்கப்படுபவர் யார்?
அ) ஆடம் ஸ்மித் ஆ) ஜே. எம். கீன்ஸ்
இ) ராக்னர் பிரிக்ஸ் ஈ.) காரல் மார்க்ஸ்

2.கீழ்வருவனவற்றுள் ஓட்ட மாறிலியை கண்டுபிடி
அ.) பண அளிப்பு ஆ) சொத்துக்கள்
இ) வருவாய் ஈ) வெளிநாட்டுச் செலாவணி இருப்பு

3. மூன்றாம் துறை ___________ எனவும் அழைக்கப்படுகிறது
அ) பணிகள் ஆ.) வருமானம்
இ.) தொழில் ஈ) உற்பத்தி

4. மொத்த மதிப்பிலிருந்து________ ஐ கழித்தால் நிகர மதிப்பு கிடைக்கும்?
அ) வருமானம் ஆ) தேய்மானம்
இ.) செலவு ஈ) முடிவடைந்த பொருட்களின் மதிப்பு

5. மறைமுக வேலையின்மையில், உழைப்பாளியின் இறுதிநிலை உற்பத்தி
அ.) பூஜ்யம் ஆ.) ஒன்று
இ.) இரண்டு ஈ) நேர்மறை

6. சேமிப்புக்கும் முதலீட்டுக்கும் இடையே சமநிலையை கொண்டு வருவது ______ நெகிழ்வு ஆகும்
அ.) தேவையின் ஆ) அளிப்பின்
இ.) மூலதனத்தின் ஈ.) வட்டியின்

7 வருவாய் உயர்ந்தால், நுகர்வு
அ) குறையும் ஆ) மாறாது
இ) ஏறி இறங்கும் ஈ) உயரும்

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

**8. பணவீக்கத்தின்பொழுது பயனடைபவர்கள் யார்?**
அ) கடன் பெற்றோர்கள் ஆ) கடன் வழங்கியோர்
இ) கூலி மற்றும் சம்பளம் பெறுவோர் ஈ) அரசு

**9. கடன் உருவாக்கம் என்பதன் பொருள்**
அ) கடன் மற்றும் முன்பண பெருக்கம் ஆ)வருவாய்
இ)செலவு ஈ)சேமிப்பு

**10. பணவியல் கொள்கையை வடிமைப்பது**
அ) கூட்டுறவு வங்கிகள் ஆ)வணிக வங்கிகள்
இ)மைய வங்கி ஈ)வெளிநாட்டு வங்கி

**11. அயல்நாட்டுச் செலுத்துநிலை உள்ளடக்கிய இனங்கள்**
அ) புலனாகும் பொருட்கள் மட்டும் ஆ)புலனாகாத பணிகள் மட்டும்
இ)அ மற்றும் ஆ ஈ)பண்ட வாணிபம் மட்டும்

**12. பிரிக் (BRIC) என்ற சுருக்கச் சொல் கோர்க்கப்பட்ட ஆண்டு**
அ) 2001 ஆ)2005 இ)2008 ஈ)2010

**13. பன்னாட்டு பண நிதியத்தின் தலைமை அலுவலகம் அமைந்துள்ள இடம்**
அ) வாஷிடங்டன் டி.சி ஆ)நியூ யார்க் இ)வியன்னா ஈ)ஜெனிவா

**14. பற்றாக்குறை நிதியாக்கத்தின் அடிப்படை நோக்கமாவது**
அ) பொருளாதார முன்னேற்றம் ஆ) பொருளாதார நிலைத்தன்மை
இ) பொருளாதார சமத்துவம் ஈ) வேலைவாய்ப்பு உருவாக்குதல்

**15. மண் மாசுவிற்கு முதல்நிலை காரணம் __________**
அ) பூச்சியை கட்டுப்படுத்தும் நடவடிக்கைகள் ஆ) நிலமேம்பாடு
இ) விவசாய நிலங்கள் வழியாக பாய்ந்தோடும் ஈ) இரசாயன உரங்கள்

**16. மின்னணு கழிவுகள் _________ என்று பொதுவாக குறிப்பிடப்படுகின்றன.**
அ) திடக்கழிவுகள் ஆ)குப்பைக் கழிவுகள்
இ) இ-கழிவுகள் ஈ) மருத்துவமனைக் கழிவுகள்

**17. கீழ்கண்ட திட்டங்களை அவை முன்மொழியப்பட்ட ஆண்டின் அடிப்படையில் காலகிரம வரிசைப்படி தொகுத்து விடையைத் தேர்ந்தெடுக்கவும்**
**i) மக்கள் திட்டம் ii) பாம்பேதிட்டம்**
**iii) ஜவஹர்லால் நேரு திட்டம் iv) விஸ்வேசுவரய்யாதிட்டம்**

அ) i)- ii)- iii)- iv) ஆ) iv)- iii)- ji)- i)
இ) i)- ii)- iv)- iii) ஈ) ii)- i)- iv)- iii)

**18. முன்னோக்குத் திட்டத்தின் மற்றொரு பெயர்**
அ) குறுகிய கால திட்டமிடல் ஆ) நடுத்தரக்காலத் திட்டமிடல்
இ) நீண்டகாலத் திட்டமிடல் ஈ) இவை எதுவுமில்லை

19. **கேள்வித்தாள் மூலம் புள்ளிவிவரம் திரட்டப்பட்டால் அது __________**
அ) முதல்நிலைவிவரம் ஆ) இரண்டாம் நிலைவிவரம்
இ) வெளியிடப்பெற்ற விவரம் ஈ) தொகுக்கப்பட்ட விவரம்

**20. நபார்டு வங்கி எப்பொழுது ஆரம்பிக்கப்பட்டது ?**
அ) ஜூலை 1962 ஆ) ஜூலை 1972 இ) ஜூலை 1982 ஈ) ஜூலை 1992

## பகுதி - II 7 x 2 = 14

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையலளிக்கவும். அவற்றில் வினா எண் 30-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

21. பேரியல் பொருளியலின் இலக்கணம் தருக.
22. GNP கணக்கிடும் சூத்திரத்தை எழுதுக:
23. ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
24. நுகர்வு நாட்டம் என்றால் என்ன?
25. நெகிழிப் பணம் என்றால் என்ன? உதாரணம் தருக.
26. செலாவணி மாற்று வீதம் என்றால் என்ன?
27. எங்கு மற்றும் எப்பொழுது சார்க் தலைமை அலுவலகம் துவக்கப்பட்டது?
28. GST இன் கூறுகள் யாவை?
29. உலக வெப்பமயமாதல் என்பதனை வரையறு.
30. பொருளாதார அளவையியல் என்றால் என்ன?

## பகுதி - III 7 x 3 = 21

**ஏதேனும் ஏழு** வினாக்களுக்கு விடையலளிக்கவும். அவற்றில் வினா எண் 40-**க்கு கட்டாயமாக** விடையளிக்கவும்.

31. பொருளாதார அமைப்பின் வகைகளை குறிப்பிடுக.
32. தலை வீத வருமானம் பற்றி ஒரு சிறு குறிப்பு எழுதுக.
33. கீழ்காண்பவற்றை சுருக்கமாக விவரி.
    அ) பருவகால வேலையின்மை
    ஆ) உடன்பாடில்லா வேலையின்மை
    இ) படித்தவர் வேலையின்மை
34. புள்ளியியலின் பணிகள் யாவை?
35. பண அளிப்பினை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?
36. இந்திய தொழில் நிதிக் கழகத்தின் பணிகளை குறிப்பிடுக.
37. நவீன அரசின் பணிகள் யாவை?
38. குறிப்பு வரைக அ) பருவநிலை மாற்றம் ஆ)அமில மழை
39. வறுமையின் நச்சு சுழற்சிக்கான காரணங்களை வரைபடத்துடன் தெளிவுபடுத்துக.
40. நேர்முக மற்றும் மறைமுக வரிகளுக்கிடையேயான மூன்று வேறுபாடுகளை கூறுக:

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

பகுதி - **IV**

**அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** 7 **x** 5 = 35

41. அ.) முதலாளித்துவம், சமத்துவம், கலப்புத்துவம் இவற்றின் தன்மைகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) தேசிய வருவாயைக் கணக்கிடும் முறைகளை விளக்குக.

42. அ.) சேயின் அங்காடி விதியினை திறனாய்வு செய்க.

**(அல்லது)**

ஆ) முடுக்கி செயல்படும் விதத்தை விளக்குக.

43. அ.) வணிகச் சுழற்சியின் பல்வேறு கட்டங்களை விவரிக்க.

**(அல்லது)**

ஆ) இந்திய ரிசர்வ் வங்கி ( RBI ) பணிகளை விவரிக்க.

44. அ.) உள்நாட்டு வாணிக்கத்துக்கும் பன்னாட்டு வாணிகத்துக்கும் இடையிலான வேறுபாடுகளை விவாதிக்கவும்.

**(அல்லது)**

ஆ) குறிப்பு எழுதுக. அ) சார்க் ஆ) பிரிக்ஸ்.

45. அ.) பொது நிதியின் எல்லைகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) அரசு செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

46. அ.)பணத்தின் பணிகளை விளக்குக.

**(அல்லது)**

ஆ) தொன்மை கோட்பாடு மற்றும் கீன்ஸ் கோட்பாடு ஆகியவற்றிற்கு இடையிலான வேறுபாடுகளை விளக்குக.

47. அ.) பல்வேறு வகையான திட்டமிடல் வகைகளை விவரி.

**(அல்லது)**

ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்ஸனின் ஒட்டுறவுக் கெழுவினை கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| தேவை( X ) | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| விற்பனை( Y ) | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |